**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 214/2019**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.03.2026 | | |
| பெயர்: | மகாராஜன்<br>(DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | முனியன் |
| கிராமம்: | பெருமங்கலம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) | வயது : | 65/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 06.03.2026</u>**

1. வாதி எனது அண்ணன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.32/1, விஸ்தீரணம் 95 சென்ட் ஆகும். சர்வே எண்.28/1ல் சொத்து உள்ளது, ஆனால் விஸ்தீரணம் தெரியவில்லை. தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் முனியன் பெயரில் உள்ள குத்தகை உரிமை சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் முனியனும் அவரது தம்பி அய்யாறும் சில சொத்துக்கள் குறித்து அவர்களுக்குள் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. தாவா சொத்துக்கள் திருப்பங்கூர் வட்டத்தில் உள்ளது. ராமகிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து குறித்து சிவலோகநாத சுவாமிக்கு ராமகிருஷ்ணன் குத்தகை உரிமை செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி ராமகிருஷ்ணன் குத்தகை உரிமை செலுத்தி அதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

3. ராமகிருஷ்ணன் சாகுபடியின் உரிமையில் உள்ளதால் கோயிலார் சார்பில் ராமகிருஷ்ணனிற்கு சிட்டா அடங்கல் வழங்கலாம் என கிராம நிர்வாக அலுவலருக்கு கடிதம் (வா.சா.ஆ.1) கொடுத்துள்ள விபரம் பற்றி எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணன்தான் தாவா சொத்தை சாகுபடி செய்து வருகிறார் என்றால் கோயிலார் சார்பில் குத்தகை செலுத்தாததால் வெளியேற சொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு முன்பு ராமகிருஷ்ணன் சாகுபடி செய்து வந்தார். ஆனால் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு (2018ம் வருடம்) 2019ல் நான் குத்தகை செலுத்தி தற்போது சாகுபடி செய்து வருகிறேன்.

4. நான் குத்தகை ரசீது செலுத்தியதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ராமகிருஷ்ணனுக்கு பாகப்பிரிவினையின்போது எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2019லிருந்து தற்போது வரை வாதி ராமகிருஷ்ணன்தான் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாக வீதத்திற்கு குத்தகை ரசீது செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. 2018ம் வருடம் குத்தகை ரசீது செலுத்தியதை தவிர அதன்பிறகு நான் குத்தகை செலுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் இந்த வருடமும் சாகுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சாகுபடி செய்யப்பட்டுள்ளதா, தரிசாக உள்ளதா, கருவேல மரங்கள் வளர்ந்துள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது.

6. வாதியின் நிலத்தை நான் சாகுபடி செய்கிறேன் என்றால் தற்போது இல்லை, இதற்கு முன்பு சுமார் 7 வருடங்களுக்கு முன்பு சாகுபடி செய்தேன். நான் சாகுபடி செய்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது, ஆனால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை நான் பிரபாகரன் என்பவருக்கு அய்யாறு மூலமாக விற்பனை செய்துவிட்டேன் என்றால் அந்த நிலம் வேறு நிலம், தாவா சொத்திற்கும் அதற்கும் சம்மந்தமில்லை. அந்த நிலம் பெருமங்கலம்

கம்பநாதசுவாமி கோயிலுக்கு சொந்தமானது.

7. கம்பநாதசுவாமி கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களையும், சிவலோகநாத சுவாமி கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களையும், எனது தகப்பனார் மற்றும் அய்யாறு அவர்களுக்கிடையில் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. அவர்கள் பரிவர்த்தனை செய்து கொண்டதை நான் ஒத்துக்கொண்டு தற்போது, மறுத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனது தகப்பனார் பெயரில் சிவலோகநாத சுவாமி கோயில் சொத்து சுமார் 4 ஏக்கர் இருக்கும், கம்பநாதசுவாமி கோயில் சொத்து சுமார் 2 ஏக்கர் இருக்கும். யார் யார் பெயரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் 2 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டேன், 4 ஏக்கர் நிலம் என்னுடைய பெயரில் உள்ளது. 4 ஏக்கர் நிலத்திற்கும் வெளியேற்று உத்தரவிற்கு எதிராக பணம் கட்டிய ரசீதை தவிர வேறு எந்த ஆவணங்களும் கோயிலாரிடமிருந்து நான் பெறவில்லை என்றால் சரிதான்.

9. எனக்கு மூத்த சகோதரர் பெயர் பெருமாள். எனது தகப்பனார் சார்பில் அவருக்கு ஒதுக்கப்பட்ட அந்த 4 ஏக்கரில் உள்ள நிலத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் உள்ள கோயில் சொத்துக்களை பொறுத்து அவரவர்களுக்குரிய (பெருமாள், ராமகிருஷ்ணன், மகாராஜன், இளங்கோவன்) பாக வீதத்தை பொறுத்து அவர்களுக்கிடையே பிரித்துக் கொண்டு அவர்கள் வசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், பின்பும் தாவா சொத்துக்கள் எனது வசமிருந்திருந்தால் கோயிலார் சார்பில் எனக்கு ஆவணங்கள் கொடுத்திருப்பார்கள் என்றாலும், அவரவர்களுக்குரிய பாக வீத சொத்துக்கள் அவரவர்கள் வைத்து சாகுபடி செய்து வருவதால் எனக்கு ஆவணங்கள் கோயிலார் சார்பில் தரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எந்த

நிலையில் உள்ளது என்று தெரியாமல் நான் வழக்கிற்காக பொய்யாக கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல. வாதி தரப்பில் அவர்களது அனுபவத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வாதி கோருகிற பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**